தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No.12 / 2025

PW : 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. ராஜகுமாரி | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் 11 ம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

11.03.2025

முதல் விசாரணை

நான் வலங்கைமான் ஒன்றியம் கொட்டபடுகை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வலங்கைமான் ஆசிரியர் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்தில் கடந்த 2012 ஜனவரி மாதம் 6 ம் தேதி எனது குடும்ப செலவிற்காக ரூ.2 லட்சம் கடனாக பெற்றேன். எனது மாத சம்பளத்திலிருந்து கடனுக்குரிய தொகையை மாதாமாதம் பிடித்தம் செய்து கொண்டார்கள். 2014 ஆம் வருடத்தில் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதம் நான் விடுப்பிலிருந்தேன். அந்த 2 மாதத்திற்குரிய கடன் தொகையை எனது சம்பளத்திலிருந்து பிடித்தம்

செய்யாததால் நான் மார்ச் மாதம் 19 ம் தேதி ரூ.18 ஆயிரத்து 500 ரூபாயை ஆஜர் எதிரியிடம் மேற்படி சங்கத்தில் வைத்து கொடுத்தேன். அதற்குரிய ரசீதை பிறகு தருவதாக கூறினார்கள். அதன்பிறகு 2014 நவம்பர் மாதம் எனது கடன் முழுவதுமாக தீர்க்கப்பட்டது. எனது தம்பியின் திருமண செலவிற்காக மீண்டும் மேற்படி சங்கத்தில் கடன் பெற விண்ணப்பம் செய்யவேண்டும் என்று கேட்டபோது என்னுடைய நாமினிக்கு ஓவர்டியூ இருப்பதால் எனக்கு கடன் தரமுடியாது என்று சொன்னார்கள். மேலும் எனக்கு ஒரு டியூ எனக்கு மீதமுள்ளதாக ஆஜர் எதிரி என்னிடம் கூறினார். அந்த தொகை ரூ.7,957/- ஐ கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி, வலங்கைமான் கிளையில் செலுத்தும்படி சொன்னார், நானே மேற்படி தொகையை செலுத்தினேன். அதற்கான கவுண்டர்பஃயிலை கேட்டார்கள். நான் ஜெராக்ஸ் எடுத்துக்கொண்டு அசலை கொடுத்துவிட்டேன். அதன்பிறகு மேற்படி சங்கத்திலிருந்து எனக்கு ஒரு தபால் வந்தது. அதில் எனக்கு கடன்தொகை மீதமிருப்பதாக கூறப்பட்டிருந்தது. என்னவென்று நான் விசாரித்தபோது ஆஜர் எதிரி கடன்தொகையை வரவு வைக்கவில்லை என்ற விவரம் எனக்கு தெரியவந்தது. அதன்பிறகு 81 விசாரணை அதிகாரி என்னை சங்கத்தில் வைத்து விசாரணை செய்தார். அதன்பிறகு மாவட்ட வணிக குற்றபுலனாய்வுத்துறை, திருவாரூர் அதிகாரியும் என்னை விசாரணை

செய்தார்கள். என்னுடைய உறுப்பினர் எண் 642 ஆகும். என்னிடம் காட்டப்படும் கடன்தொகை பேரேடு எண் 18 ல் பக்கம் எண் 229 ல் காணப்படும் விவரங்கள் எனக்கு சங்கத்தால் கடன் வழங்கப்பட்டு நான் வரவு வைத்த தொகையின் விவரங்கள் ஆகும். அசாஆ 11 ஆகும். என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு 19 ல் உள்ள பக்கம் எண் 28 ல் உள்ள விவரம் நான் மீதம் செலுத்தவேண்டிய தொகைபற்றி கூறப்பட்டது. அது அசாஆ 12 ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 81 விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்ற பிறகு என்னால் கையொப்பம் செய்யப்பட்ட ஆவணம் ஆகும் அது அசாஆ 13 ஆகும். என்னிடம் காட்டப்படும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து என்னால் செலுத்தப்பட்ட ரூபாய் 7,957/- தேதி 20.03.2015 நான் பணம் செலுத்தியதற்கான கவுண்டர்பயிலின் ஜெராக்ஸ் நகல் அது அசாஆ 14 ஆகும். வணிக குற்றபுலனாய்வுத்துறை போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

நான் முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான் 81 விசாரணை அதிகாரியிடமும் போலிசாரிடமும் கூறியுள்ளேன். போலிசார் 2019 ம் வருடம் நவம்பர் மாதம் 5 ந்தேதி என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்து கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். 81 விசாரணை அதிகாரி என்னை

எப்போது விசாரித்தார் என்று தற்போது ஞாபகம் இல்லை. 18.03.2014 அன்று ரூ.18,500/- செலுத்தியதாக சொல்லப்படுவதற்கு என்னால் ஆதார ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு பணம்கட்டியதற்கான ரசீது கொடுக்கப்படவில்லை அதனால் நான் கொடுக்கவில்லை. நான் குறிப்பிட்ட தேதியில்தான் பணம் கட்டினேன் என்பதற்குரிய ஆதாரம் எதுவும் என்னால் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். கடன் பெற்றால் மாதாமாதம் திரும்ப செலுத்தவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். அதன்படி 19.03.2014 ல் நான் பணம் கொடுத்தபிறகு மாதாமாதம் எனக்குரிய கடன் தொகையை சங்கத்தில் செலுத்தியதற்கான ஆதார ஆவணம் விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பளத்தில் பிடித்தம் செய்ததால் அதை தனியாக நான் கொடுக்கவில்லை. சம்பளத்தில் கடன் தொகை பிடித்தார்கள் என்பதற்குரிய ஆதார ஆவணத்தையாவது விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் போலிசாரிடம் கூட்டுறவு சங்கத்திலிருந்து கொடுக்கப்பட்ட ரெக்கவரி ஆவணத்தை கொடுத்தேன். அதை நான் நகல் எடுத்து வைத்துள்ளேனா என்றால் எடுத்து வீட்டில் வைத்துக்கொண்டேன். வீட்டில் உள்ளது. நான் சொல்வதுபோல போலிசாரிடம் மேற்படி ரெக்கவரி ஆவணத்தை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.மாதாமாதம் தவணையாக

கடன்தொகை செலுத்தாதபோது அதற்கு கூடுதல் வட்டி செலுத்தவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். நவம்பர் 2014 ல் கடன்தொகை முழுவதும் செலுத்தப்பட்டுவிட்டது என்பது நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தம்பியின் திருமணத்திற்காக நான் கடன்கேட்டபோது எனது நாமினிக்கு ஓவர்டியூஇருப்பதாக சொன்னார்கள் என்ற விவரத்தை போலிசாரிடம் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த ஒரு தேதியிலும் எதிரியிடம் எந்த ஒரு தொகையும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அசாஆ 11 மற்றும் 12 ஆவணங்களின் விவரம் எனக்கு நேரடியாக தெரியாது நான் பெற்ற கடன்தொகையை உரிய காலத்தில் முறையாக திரும்ப செலுத்தி முடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தவறினை மறைப்பதற்காக போலிசார் கேட்டுக்கொண்டதற்காக நான் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No.12 / 2025

PW : 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. நேசப்பிரியா | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் 11 ம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

11.03.2025

முதல் விசாரணை

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் த.வடகாடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 2012 ஆம் வருடம் திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் ஒன்றியம் மணக்கால் ஊராட்சிய ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணியில் சேர்ந்து 2014 ஆம் வருடம் ஜுலை மாதம் வரை அங்கு பணிபுரிந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். வலங்கைமான் கூட்டுறவு சங்கத்தில் நான் கடன் வாங்கியபோது ஆஜர் எதிரி அந்த சங்கத்தின் செயலாளராக பணிபுரிந்தார். எனது குடும்ப செலவிற்காக மேற்படி சங்கத்தில்

நான் கடன் கேட்டிருந்தேன். அதன்படி 2014 ம் ஆண்டு மே மாதம் எனக்கு ரூ.3 லட்சம் மேற்படி சங்கத்தால் எனக்கு கடனாக கொடுக்கப்பட்டது. மேற்படி தொகையில் டெபாசிட்டாக ரூ.30 ஆயிரம் பிடித்துக்கொண்டு மீதமுள்ள ரூ.2,70,000/- ம் எனக்கு கடனாக வழங்கப்பட்டது. அதன்பிறகு ஜுன்மாத சம்பளத்தில் ரூ.3,000/- ம் அசலுக்காகவும், வட்டி தனியாகவும் பிடித்தம் செய்யப்பட்டது. இந்நிலையில் நான் மனமொத்த மாறுதலில் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் கரிசைகாடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிமாறுதல் பெற்றேன். பணிமாறுதலில் மாவட்டம் விட்டு மாவட்டம் செல்லுவதால் நான் பெற்றிருந்த கூட்டுறவு சங்க கடனை அடைத்து கடன்இல்லா சான்று பெற்றால்தான் மாவட்ட மாறுதல் கொடுக்கமுடியும் என்று என்னுடைய அலுவலகத்தில் கூறப்பட்டது. பங்குத்தொகை ரூ.30,000/- மற்றும் 2014 ஜுன் மாதத்தில் நான் செலுத்திய ரூ.3,000/- ஐ கழித்து மீதமுள்ள ரூ.2,67,000/- ஐ மேற்படி சங்கத்தில் செலுத்திவிட்டேன். அதன்பிறகு கடன்இல்லா சான்றிதழ் சங்கத்தின் மூலம் எனக்கு வழங்கப்பட்டது. நான் செலுத்திய தொகைக்கு ரசீது கேட்டபோது சங்க கூட்டம் நடத்திதான் ரசீது கொடுக்க வேண்டும் என கூறினார்கள். இந்நிலையில் நான் கடன்இல்லா சான்றிதழே போதுமானது என்று கூறியதால் நான் பட்டுக்கோட்டை கரிசைகாடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில்

பணியில் சேர்ந்தேன். மேற்படி பள்ளியில் நான் பணிபுரிந்தபோது வலங்கைமான் கூட்டுறவு சங்கத்தின் மூலம் என் பெயரில் ரூ.2,67,000/- ம் கடன் அதற்குரிய வட்டி மற்றும் ரூ.30,000/- ம் பங்குதொகையில் கழிப்பதாக சொன்னதையும் கழிக்காமல் அதற்கும் வட்டி சேர்த்து ரூ.4,00,000/- ற்கு மேல் நான் கடன்தொகை கட்டவேண்டும் என்று மேற்படி சங்கத்திலிந்து எனக்கு கடிதம் வந்தது. நான் மேற்படி சங்கத்தை அணுகி கேட்டபோது நான் கட்டிய கடன் தொகையை சங்கத்தில் வரவு வைக்கப்படவில்லை என்று தெரிந்துகொண்டேன். அதன்பிறகு என்னை திருவாரூர் வணிக குற்ற புலனாய்வுப்பிரிவிலிருந்து என்னை விசாரணை செய்தார்கள். அதன்பிறகு நான் எனது பங்குதொகை ரூ.30 ஆயிரத்திற்கு வட்டியுடன் ரூ.80 ஆயிரம் செலுத்தினேன். அதற்கு எனக்கு ரசீதுகொடுத்தார்கள். கடந்த 2014 லிருந்து இதுநாள்வரை என்னுடைய பங்குத்தொகையான ரூ.30 ஆயிரம் மேற்படி சங்கத்தில் எனது பெயரில் நிலுவையில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு எண் 21 ல் பக்கம் 33 ல் உள்ள விவரங்கள் வலங்கைமான் கூட்டுறவு சிக்கன சங்கத்தால் எனக்கு கடன் வழங்கப்பட்ட விவரங்கள் ஆகும். இந்த விவரம் அசாஆ 8 ஆகும் (எதிரி தரப்புஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி சங்கத்தால் எனக்கு வழங்கப்பட்ட கடன் இல்லா சான்றாகும். அது அசாஆ 9 ஆகும். (எதிரி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு

செய்யப்படுகிறது) என்னிடம் காட்டப்படும் கையொப்பத்தை மேற்படி சங்கத்திலிருந்து கடிதம் வந்தபிறகு போட்டுக்கொடுத்தேன். 81 விசாரணை அறிக்கையில் உள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் அசாஆ 10 ஆகும். வணிக குற்றப்புலனாய்வுத்துறை போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்குவிசாரணை

நான் முதல்விசாரணையில் குறிப்பிட்டுள்ள விவரங்களைதான் போலிசாரின் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். போலிசார் என்னை எங்கு எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் தேதிமாதம் ஞாபகம் இல்லை. ஆனால் போலிசார் விசாரித்தார்கள். விசாரித்து கையொப்பம்பெற்றார்கள். அசாஆ 8 ல்உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அசாஆ 9 ல் என்னுடைய கடன் எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் கட்டவேண்டிய ரூ.2,67,000/- ம் தொகையை நான் ஒரே நேரத்தில் செலுத்தியுள்ளேன் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த தொகை எனக்கு எப்படி வந்தது என்று போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மேற்குறிப்பிட்ட பணம் எனக்கு எப்படி கிடைத்தது அதை நான் யாரிடம் செலுத்தினேன் என்பது குறித்து ஆதார ஆவணங்கள் போலிசார் விசாரணையில் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் மேற்குறிப்பிட்ட தொகையை செலுத்தி கணக்க முடிக்கவில்லை

என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்து அதை வரவுவைக்கப்படாத நிலையில் அந்த பணத்தை செலுத்தப்படாததற்குரிய நபர்கள் குறித்து நான் தனியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதேதியில் மொத்தமாக பணம் எதையும் கூட்டுறவு சங்கத்திற்கு கட்டவில்லை என்றும் அதனால் தான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் பணம் செலுத்தாத விவரம் எனக்கு தெரியும் என்றும் அதை மறைத்து போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No.12 / 2025</u>

PW : 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. திலகவதி | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் 11 ம் தேதி ......................... பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

<u>11.03.2025</u>

<u>முதல் விசாரணை</u>

நான் 31.05.2014 ஆம் ஆண்டு திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் எதிரியை தெரியும். நான் வலங்கைமான் ஒன்றியத்தில் உள்ள ஆசிரியர் கூட்டுறவு சிக்கன சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்தேன். என்னுடைய உறுப்பினர் எண் 375 ஆகும். நான் மேற்படி சங்கத்தில் கடன் பெற்று தொடர்ந்து வரவு செலவு வைத்திருந்தேன். 2014 ல் ஓய்வுபெற வேண்டியிருந்ததால் என்னுடைய கடன் நிலுவையை சீர்செய்ய வேண்டி ஆஜர் எதிரியிடம் எனது கடன்நிலுவை

எவ்வளவு உள்ளது என்று கேட்டு கொண்டும் கடனை கட்டும்போது எனக்குரிய பங்குத்தொகையை கடனில் கழித்துக்கொண்டு மீதம் எவ்வளவு செலுத்தவேண்டும் என்று கேட்டபோது ரூ.1,10,000/- ம் கட்டவேண்டும் என்று கூறினார். அதன்படி நான் ரூ.1,10,000/- ஐ கட்டிவிட்டு கடன்இல்லா சான்று பெற்றுக்கொண்டேன். 2014 ல் நான் ஓய்வு பெற்றுவிட்டேன். இந்நிலையில் நான் பணம் செலுத்தவில்லை என கூட்டுறவு சங்கத்திலிருந்து எனக்கு அறிவிப்பு வந்தது. நான் அதற்கு பதில் அறிவிப்பு கொடுத்தேன். அத்துடன் கடன்இல்லா சான்றிதழையும் இணைத்து அனுப்பினேன். அதன்பிறகு மீண்டும் 81 விசாரணை அலுவலர் என்னை விசாரணை செய்தார். நான் முழுமையாக எல்லாபணமும் செலுத்திவிட்டதாக சொன்னேன். 81 விசாரணை அதிகாரி நான் கடன்தொகையை முழுவதுமாக செலுத்தவில்லை என்றும் சொன்னார். நான் வாங்கிய கடன்தொகை முழுவதையும் செலுத்தியபிறகே கடன்இல்லா சான்றிதழ் அளிக்கப்பட்டதாக சொன்னேன். அதன்பின்பு இணை இயக்குநர் என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு எண் 18 பக்கம் 33 ல் உள்ள விவரங்கள் நான் வலங்கைமான் ஆசிரியர்கள் சிக்கன கூட்டுறவு சங்கத்தில் கடன்பெற்று வரவு வைக்கப்பட்ட விவரங்கள் ஆகும். அது அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது (எதிரி தரப்பு

ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது) என்னிடம் காட்டப்படும் ஆவணம் வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்தால் எனக்கு வழங்கப்பட்ட கடன் விவரம் சான்று நகல் அது அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எதிரி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 81 விசாரணை அதிகாரி என்னை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார். அந்த கையெழுத்து என்னுடையதுதான். அது அசாஆ 7 ஆகும். வணிக குற்றவியல் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்குவிசாரணை

இந்த வழக்கு தொடர்பாக என்னை போலிசார் எப்போது எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை, வலங்கைமானில் உள்ள கூட்டுறவு சங்கத்தில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் விசாரித்து என்னிடம் வாக்குமூலம் பெற்று அதில் கையெழுத்தும் பெற்றுக்கொண்டார்கள். போலிசாரின் விசாரணைக்கு முன்பே இணை இயக்குநர் என்ற பெயரில் ஒரு நபர் என்னை விசாரணை செய்தார். 81 விசாரணை அதிகாரி 2019-2020

ஆண்டுகளில் என்னை விசாரணை செய்தார். நான் முதல்விசாரணையில்சொல்லியுள்ளபடிதான் போலிசார் மற்றும் 81 விசாரணை அதிகாரியிடம் சொல்லியுள்ளேன். மேற்படி விவரங்களை தவிர வேறுவிசயங்கள் எதுவும் சொல்லவில்லை. ரூ.1,10,000/- ம் தொகையை எந்த தேதியில் எங்கு வைத்து யாரிடம் கொடுத்தேன் என நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 2014 மே மாதத்தில் கவிதா என்பவரிடம் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன். அதற்கான ஆதாரம் ஆவணம் எதையும் நான் கொடுக்க வில்லை என்றால் சரிதான். மேற்கூறிய விவரம் தவறு என்றும் நான் எப்போதும் கவிதா என்பவரிடம் எந்த பணத்தையும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பணம் கொடுத்தும் அது செலுத்தப்படவில்லை என்பதை தெரிந்துகொண்டு எதிரிமீது தனிப்பட்டவிதத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எனக்கு கடன்பாக்கியிருந்த விவரங்கள் தெரியும் என்றும் அதனால் நான் எதிரிமீது எந்தவித புகாரும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசாஆ 5 பேரேட்டில் உள்ள விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அசாஆ 6 ல் என்னுடைய கடன் எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதே போல என் கணவரின் பெயர்,

வீட்டுமுகவரி குறிப்பிடப்படவில்லை. அதில் உள்ள கையெழுத்து எதிரியுடைய கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல.

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.